**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : ரோஷ்னா காசிம்**

தேதி : 26.04.2026 – ஞாயிற்றுக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

காற்றாலை மின் உற்பத்தித் துறையில் இந்தியா உலகளவில் 4ஆவது இடத்தில் இருப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மேற்கு வங்கத்தில், இரண்டாவது மற்றும் இறுதி கட்ட சட்டப்பேரவை தேர்தலுக்கான பிரச்சாரம் நாளை மாலையுடன் முடிவடைகிறது.

வரும் 10 ஆண்டுகளில் இந்தியாவின் தொழில்நுட்பத் திறனே நாட்டின் வலிமையை வரையறுக்கும் என்று மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

மூத்த புகைப்படக் கலைஞரான பத்மஸ்ரீ ரகு ராய், தமது 83ஆவது வயதில் இன்று காலமானார்.

***சி.பி. ராதாகிருஷ்ணன் (4)***

குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி ராதாகிருஷ்ணன், 2 நாள் பயணமாக நாளை ஆந்திர மாநிலத்திற்கு செல்கிறார். இந்தப் பயணத்தின்போது, விசாகப்பட்டினத்தில் நடைபெறும், ஆந்திர பல்கலைக் கழகத்தின் நூற்றாண்டு விழா கொண்டாட்டங்களில் சிறப்பு விருந்தினராக பங்கேற்கிறார்.

***மன் கீ பாத் -1 (4)***

பிரதமர் திரு. நரேந்திர மோடி, தமது எண்ணங்களை வானொலி மூலம் பகிர்ந்து கொள்ளும் 133ஆவது மன் கீ பாத் எனும் மனதின் குரல் நிகழ்ச்சி இன்று இடம் பெற்றது. இந்நிகழ்ச்சியின் தமிழாக்கம் இன்றிரவு 8 மணிக்கு மறு ஒலிபரப்பு செய்யப்படும். நிகழ்ச்சி குறித்த கூடுதல் தகவல்கள்…

(வாய்ஸ்)

***மன் கீ பாத் – 2 (15)***

(வாய்ஸ்)

கல்பாக்கத்தில் உள்ள அதிவேக Breeder Reactor சாதனை படைத்ததன் மூலம், இந்தியாவின் பெருமையை உயர்த்திய நம் அணு விஞ்ஞானிகளுக்கு, பிரதமர் திரு. நரேந்திர மோடி, தமது மன் கீ பாத் உரையில் வாழ்த்துத் தெரிவித்துள்ளார். இந்தியாவின் அணு சக்தி பயணத்தில் இது ஒரு வரலாற்று மைல் கல் என்று குறிப்பிட்ட பிரதமர், அணு உலை முற்றிலும் உள்நாட்டு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி கட்டப்பட்டது என்பதையும் சுட்டிக் காட்டினார். ப்ரீடர் அணு உலை, மின்சாரத்தை உற்பத்தி செய்வது மட்டுமல்லாமல், எதிர்காலத்திற்கான புதிய எரிபொருளையும் உற்பத்தி செய்கிறது என்றும் அவர் விவரித்தார்.

2024ஆம் ஆண்டு மார்ச் மாதம் கல்பாக்கத்தில் நடைபெற்ற இந்த அணு உலையின் மையப் பகுதி, எரிபொருள் ஏற்றும் நிகழ்வை தாம் நேரில் கண்டதையும் பிரதமர் நினைவு கூர்ந்தார்.

இந்தியாவின் காற்றாலை மின் உற்பத்தித் திறன் தற்போது 56 ஜிகாவாட்டிற்கும் அதிகமாக உற்பத்தி செய்யப்படுவதாகவும், இது கடந்த ஆண்டைவிட 6 ஜிகாவாட் அதிகம் என்றும் பிரதமர் தெரிவித்தார். இத்துறையில் இந்தியா மிக வேகமாக முன்னேறி, உலகளவில் 4ஆவது இடத்தில் இருப்பதாகவும் அவர் கூறினார்.

***மன் கீ பாத் – 3 (11)***

குஜராத், தமிழ்நாடு, மகாராஷ்டிரா மற்றும் ராஜஸ்தான் உள்ளிட்ட பல மாநிலங்கள் இத்துறையில் முன்னோடிகளாக திகழ்வதாகவும் பிரதமர் திரு. மோடி குறிப்பிட்டார். இந்தியாவின் வளர்ச்சிக்கு சூரிய ஆற்றலும், காற்றாற்றலும் இன்றியமையாதவை என்று அவர் குறிப்பிட்டார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, நடைபெற்று வரும் மக்கள் தொகை கணக்கெடுப்பு பிரச்சாரத்தை தனது மன் கீ பாத் உரையில் முன்னிலைப் படுத்தினார். உலகின் மிகப் பெரிய மக்கள் தொகை கணக்கெடுப்பான தற்போதைய கணக்கெடுப்பு குறித்து, ஒவ்வொரு இந்தியரும் அறிந்திருக்க வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

மக்கள் தொகை கணக்கெடுப்பு – 2027, டிஜிட்டல் மயமாக்கப் பட்டுள்ளதாகவும், அனைத்து தகவல்களும் நேரடியாக டிஜிட்டல் வடிவில் பதிவு செய்யப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

***மன் கீ பாத் – 4(12)***

பிரதமர் திரு. மோடி தமது மன் கீ பாத் உரையில், வங்காள நாட்காட்டியின் படி, வைசாக் மாதத்தின் 25ஆம் நாளான, வரும் மே மாதம் 9-ஆம் தேதியன்று நாடு முழுவதும் குருதேவ் ரவீந்திரநாத் தாகூரின் 164ஆவது பிறந்தநாள் கொண்டாடப்படவுள்ளது என்றும் தெரிவித்த அவர், பல புகழ்பெற்ற கல்வி நிறுவனங்களை உருவாக்கிய ஒரு பன்முக ஆளுமையாகத் திகழ்ந்த குருதேவ் தாகூருக்கு, அஞ்சலி செலுத்தினார்.

மக்களிடையே தேசபக்தி உணர்வை தட்டி எழுப்பிய அனைத்துத் துணிச்சலான சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கும் அவர் மரியாதை செலுத்தினார். குழந்தைகள் தங்கள் கோடை விடுமுறையை முழுமையாகக் கொண்டாடுமாறும், அதே வேளையில் புதிதாக ஏதேனும் ஒன்றைக் கற்றுக்கொள்ள முயற்சிக்குமாறும் அறிவுறுத்தினார். கோடைக்காலத்தில் அனைவரும் தங்கள் உடல்நலத்தில் போதிய அக்கறை செலுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

***மேற்கு வங்கம் -1 (19)***

மேற்கு வங்க மாநிலத்தில், 142 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான இரண்டாம் மற்றும் இறுதி கட்ட வாக்குப் பதிவு வரும் 29ஆம் தேதி நடைபெற உள்ளது. தேர்தல் பிரச்சாரம் நாளை மாலையுடன் முடிவடைய உள்ள நிலையில், பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த முக்கிய தலைவர்கள், தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர். பாஜக மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி, இன்று, Bongaon மாவட்டம் தாகூர் நகர் மற்றும் ஹூக்ளி மாவட்டம் ஹரிபாலில் நடைபெற்ற பொதுக்கூட்டங்களில் உரையாற்றினார். அப்போது ஆளும் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் ஊழலும், நிர்வாகத் தோல்விகளும் மக்களை பெரும் நெருக்கடிக்கு தள்ளியுள்ளதாக திரு. மோடி குற்றம் சாட்டினார்.

மேலும் மேற்கு வங்கத்தில் உள்ள சணல் ஆலைகளுக்கு ஆதரவு அளிக்கவும், சணலுக்கான தேவையை அதிகரிக்கவும் மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகத் தெரிவித்தார்.

கோதுமை மற்றும் அரிசி ஆகியவற்றை சணல் பைகளில் மட்டுமே அடைக்க வேண்டும் என்பதை கட்டாயமாக்கி இருப்பதும், ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பைகளுக்கு தடை விதித்து இருப்பது அந்த நடவடிக்கைகளில் அடங்கும் என்றும் அவர் கூறினார். பின்னர் வடக்கு கொல்கத்தாவில் நடைபெறும் சாலைப் பேரணியிலும் கலந்து கொள்கிறார்.

***மேற்கு வங்கம் - 2 (10)***

தெஹட்டா, நாடியா மற்றும் அனுலியா ஆகிய இடங்களில் நடைபெறும் பொதுக்கூட்டங்களில் பாஜக மூத்த தலைவரும், மத்திய உள்துறை அமைச்சருமான திரு. அமித் ஷா உரையாற்றுகிறார். மேலும், பாஜக தலைவர் திரு. ஜெ.பி நட்டா, கொல்கத்தாவில் சில இடங்களில் சாலைப் பேரணிகளை நடத்துகிறார்.

திரிணாமுல் காங்கிரஸ் கட்சித் தலைவரும், மேற்கு வங்க முதலமைச்சருமான செல்வி மம்தா பானர்ஜி, பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டுள்ளார். எதிர்கட்சித் தலைவர் திரு. சுவேந்து அதிகாரி மற்றும் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் திரு. அபிஷேக் பானர்ஜி உள்ளிட்டோரும் தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

***ஜிதேந்திர சிங் (20)***

வரும் 10 ஆண்டுகளில் இந்தியாவின் தொழில்நுட்பத் திறனே நாட்டின் வலிமையை வரையறுக்கும் என்று மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார். அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸில் நடைபெற்ற பான்-ஐஐடி முன்னாள் மாணவர் மாநாட்டில் காணொளி வாயிலாக உரையாற்றியபோது அவர் இவ்வாறு கூறினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய டாக்டர் சிங், முக்கிய மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் இந்தியா ஒரு முதன்மை நாடாக உருவெடுக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். கல்வித்துறை, தொழில் துறை மற்றும் அரசு ஆகியவற்றுக்கு இடையே ஆழமான ஒத்துழைப்பு அவசியம் என்பதையும், புதிய கல்வி மாதிரிகள் மற்றும் நிறுவனக் கட்டமைப்பின் அவசியத்தையும் அவர் எடுத்துரைத்தார்.

புலம்பெயர்ந்த இந்தியர்களின், குறிப்பாக ஐஐடி முன்னாள் மாணவர்களின் பங்களிப்பு, இந்தியாவிற்கு இன்றியமையாதது என்று கூறிய அவர், முதலீடுகள், வழிகாட்டுதல், நிறுவன ஒத்துழைப்புகள் மற்றும் கொள்கை ஈடுபாடு ஆகியவற்றின் மூலம் அவர்களின் பங்களிப்பு, நாட்டின் வளர்ச்சிப் பாதையைத் தொடர்ந்து வலுப்படுத்துகிறது என்றும் கூறினார்.

இந்த மாநாட்டில் சர்வதேச தொழில்நுட்பத் தலைவர்கள், தொழில்முனைவோர், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் கலந்துகொண்டனர்.

*அஜீத் தோவல் (6)*

தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜீத் தோவல் ஐக்கிய அரபு அமீரகத்தின் அதிபர் திரு. முகமது பின் சையது அல் நஹியானை சந்தித்துப் பேசினார். இந்த சந்திப்பின்போது, இரு நாடுகளுக்கும் இடையிலான உத்திசார் கூட்டாண்மையை வலுப்படுத்துவது, பிராந்திய சூழல் மற்றும் பரஸ்பர நலன் சார்ந்த விஷயங்கள் குறித்து இரு தலைவர்களும் விவாதித்ததாக, அந்நாட்டில் உள்ள இந்தியத் தூதரகம் தனது சமூக ஊடகப் பதிவில் தெரிவித்துள்ளது.

*ரகு ராய் -1 (2)*

மூத்த புகைப்படக் கலைஞரான பத்மஸ்ரீ ரகு ராய், தமது 83 வயதில் இன்று காலமானார். இவர் குறித்த கூடுதல் தகவல்கள்...

(வாய்ஸ்)

*ரகு ராய் - 2 (18)*

(வாய்ஸ்)

1942 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ஆம் தேதி தற்போது பாகிஸ்தானில் உள்ள ஜாங்கில் பிறந்த ரகுராய், கடந்த 2 ஆண்டுகளாக புற்றுநோயினால் பாதிக்கப்பட்டிருந்தார். இந்தியாவில் மட்டுமல்லாமல் உலகம் முழுவதிலும் மிகவும் மதிக்கப்படும் புகைப்படக் கலைஞர்களில் ஒருவராகத் திகழ்ந்த, அவரின் புகைப்படங்கள் பெரும்பாலும் நவீன இந்தியாவின் "காட்சிப் பதிவு" என்றே வர்ணிக்கப்படுகின்றன.

வரலாற்றிலேயே மிக மோசமான தொழில்சார் பேரழிவுகளில் ஒன்றாகக் கருதப்படும் போபால் விஷவாயுப் பேரழிவிற்குப் பிந்தைய காலகட்டத்தில், அவர் மிகவும் வலிமையான புகைப்படங்களைப் பதிவு செய்தார்.

வங்கதேச விடுதலைப் போரின்போது அவர் எடுத்த வீரியமிக்க புகைப்படங்களுக்காக, 1972-ஆம் ஆண்டில் அவருக்கு 'பத்மஶ்ரீ' விருது வழங்கப்பட்டது.

1992-ஆம் ஆண்டிற்கான "சிறந்த புகைப்படக் கலைஞர்" விருதினை அமெரிக்கா வழங்கி கவுரவித்தது. 2019-ஆம் ஆண்டில், புகைப்படத் துறையின் மிக உயர்ந்த சர்வதேச விருதுகளில் ஒன்றான பிரான்ஸ் நாட்டின் நுண்கலைகளுக்கான புகைப்பட விருதை அவர் வென்றார்.

\மேலும், 2017-ஆம் ஆண்டில் மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சகத்தின் சார்பில் அவருக்கு 'வாழ்நாள் சாதனையாளர் விருது' வழங்கி கவுரவிக்கப்பட்டது.

***எல்பிஜி (14)***

நாடெங்கும் பெட்ரோலியப் பொருட்கள் மற்றும் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்ய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக, பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் தெரிவித்துள்ளது. மேலும், எந்தவொரு விநியோகஸ்தரிடமும், தட்டுப்பாடு இருப்பதாக புகார்கள் ஏதும் வரவில்லை என்றும் அமைச்சகம் கூறியுள்ளது.

நாடு முழுவதும் ஆன் லைன் எல்பிஜி சிலிண்டர் முன்பதிவு சுமார் 99 சதவிகிதத்தை எட்டியுள்ளதாகவும், OTP அடிப்படையிலான விநியோகம் 94.5 சதவிகிதத்தை கடந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த மாதம் முதல் 5 லட்சத்து 36 ஆயிரத்துக்கும் அதிகமான PNG இணைப்புகள் பயன்பாட்டிற்கு வந்துள்ளன என்றும், மேலும் 2 லட்சத்து 61 ஆயிரம் கூடுதல் இணைப்புகளுக்கான உள்கட்டமைப்பு உருவாக்கப்பட்டு மொத்த எண்ணிக்கை சுமார் 7 லட்சத்து 97 ஆயிரமாக உயர்ந்துள்ளதாகவும் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

***உமர் அப்துல்லா (18)***

ஜம்மு காஷ்மீர் முதலமைச்சர் உமர் அப்துல்லா பெங்களூருவில் இன்று, கல்வித் துறை பிரதிநிதிகள் குழுவினருடன் கலந்துரையாடினார். அப்போது, நாட்டின் கல்வி நிறுவனங்களை யூனியன் பிரதேசத்தின் உயர்கல்வித் துறையில் முதலீடு செய்யவும், இப்பகுதியை ஒரு துடிப்பான கல்வி மையமாக உருவாக்குவதில் பங்களிக்கவும் அழைப்பு விடுத்தார். மேலும், புதிதாக அறிவிக்கப்பட்ட ஜம்மு காஷ்மீர் தனியார் பல்கலைக்கழகச் சட்டத்தின் கீழ் உள்ள வாய்ப்புகளையும் அவர் எடுத்துரைத்தார்.

ஜம்மு காஷ்மீர் தனியார் பல்கலைக்கழகங்கள் மசோதா - 2026, சமீபத்திய பட்ஜெட் கூட்டத்தொடரின் போது சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது. இந்த புதிய கட்டமைப்பு, புகழ்பெற்ற நிறுவனங்கள் யூனியன் பிரதேசத்தில் வளாகங்களை நிறுவவும், நவீன, அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் உலகளவில் போட்டித்தன்மை வாய்ந்த கல்விச் சூழலை ஊக்குவிக்கவும் குறிப்பிடத்தக்க வாய்ப்புகளை உருவாக்குவதாகவும் திரு. அப்துல்லா கூறினார்.

மேலும், நாடு முழுவதிலுமிருந்து மற்றும் வெளிநாடுகளிலிருந்தும் மாணவர்கள், அறிஞர்கள் மற்றும் ஆராய்ச்சி ஒத்துழைப்புகளை ஈர்ப்பதற்காக வெளிப்படையான மற்றும் முதலீட்டாளர்களுக்கு உகந்த சூழலை அவர் உறுதி செய்தார்.

***கிரிக்கெட் (3)***

ஐபில் 20 ஓவர் கிரிக்கெட் போட்டித் தொடரில் இன்றிரவு 7.30 மணிக்கு லக்னோவில் நடைபெறும் ஆட்டத்தில், லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் மற்றும் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் மோத உள்ளன.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

காற்றாலை மின் உற்பத்தித் துறையில் இந்தியா உலகளவில் 4ஆவது இடத்தில் இருப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மேற்கு வங்கத்தில், இரண்டாவது மற்றும் இறுதி கட்ட சட்டப்பேரவை தேர்தலுக்கான பிரச்சாரம் நாளை மாலையுடன் முடிவடைகிறது.

வரும் 10 ஆண்டுகளில் இந்தியாவின் தொழில்நுட்பத் திறனே நாட்டின் வலிமையை வரையறுக்கும் என்று மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

மூத்த புகைப்படக் கலைஞரான பத்மஸ்ரீ ரகு ராய், தமது 83 ஆவது வயதில் இன்று காலமானார்.